ஒ. எம். சுப்பிரமணியன்

Regd. No. M. 4593. "KUDI ARASU"

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 18 } ஈரோடு, 6-1-1945 மார்கழி-மீ 23உ. { மலர் 13

# தாழ்த்தப்பட்டோர் முன்னேற வழி

## பெரியார் பேசினது

(மணி தொகுத்தது)

சுமார் 15-வருடங்களுக்கு முன் சென்னை ராயபுரத்தில் கண்ணப்பர் வாசகசாலையைத் திறந்துவைக்கையில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு இன்று நாட்டில் விளம்பரப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்டோர் பிரச்சினைக்குப் பொருத்தமானதாக விருப்பதால் அதன் சில பகுதிகளைக் கீழே தருகிறோம்:-

"ஆதிதிராவிட மக்களாகிய நீங்களும் மனிதர்களேயாயினும் சமூக வாழ்க்கையில் மிருகங்களைவிடக் கேவலமாகத்தான் நடத்தப்படுகின்றீர்கள் என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

உங்களுக்குள் சிலர் ராவ்பகதூர்களாயும், ராவ்சாகிப்களாயும், மோட்டார் வாகனங்களிலும், கோச்சுகளிலும் செல்லத்தக்க பணக்காரர்களாயுமிருக்கலாம்.

மற்றும் உங்களுள் கூர்மையுள்ள அறிவாளிகளும், படிப்பாளிகளுமிருக்கலாம்.

எவ்வாறிருந்தாலும் அத்தகையவர்களையும் பிறந்த ஜாதியையொட்டித் தாழ்மையாகத்தான் கருதப்பட்டு வருகின்றதென்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள்.

அதற்கு ஒரே ஒரு காரணந்தான் இருக்கிறதென்று சொல்லவேண்டும். அது ஜாதி வித்தியாசக் கொடுமையேயாகும்.

ஆதிதிராவிடர்கள் என்றால் கோவிலுக்குள் வரக்கூடாதென்கிறார்கள். (இப்பொழுது ஒரு சில இடங்களில் தாழ்த்தப்பட்டோர் கோவிலுக்குள் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்றால், அது அரசாங்கத்தாரின் சட்டபலத்தைக் கொண்டு. ஆனால், பொதுவாகத் தாழ்த்தப்பட்டோர் அனுமதிக்கப்படுகிறார்களா [illegible] இன்னும் [illegible]கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் அதை ஆதரிக்கிறார்களா என்பதையும் இதுசமயம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆம்) ஆதிதிராவிடர்களும் இந்துக்கள் தமென ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும் அவர்களை இழிவுபடுத்திக் கொடுமை செய்வதில் ஒரு சிறிதும் பின்வாங்குவதில்லை.

பிறவியில் மிருகமாய்ப் பிறந்தும் ஜாதியில் நாய் என்றழைக்கப்படுவதுமான, மலம் உண்ணும் கேவலமான ஜந்துவையும் தாராளமாக விட்டுவிடும்போது, ஆறறிவுள்ள மனிதனாய்ப் பிறந்து இந்துவென்றும் சொல்லிக்கொள்ளும் ஆதிதிராவிடர் எனப்படும் ஒரு முனிசாமியை அவர் பிறவியின் காரணமாக ஸ்நானத்திலும் விட மறுக்கப்படுவது என்ன கொடுமை?

இக்கொடுமையைத் தடுத்துக் கேட்டால் அவர்கள் இந்துக்களாய்ப் பிறந்துவிட்டார்கள், அவர்களைக் குறித்து மனு தர்ம சாஸ்திரம் இப்படிச் சொல்லுகிறது, வேதத்தின் கர்மகாண்டங்கள் அப்படிச் சொல்லுகின்றன என்று சாஸ்திரக் குப்பைகளின் மீது பழியைப் போடுவதோடு மதத்தையும் தங்கள் கொடுமைகளுக்கு ஆதாரமாகக் கொள்ளுகின்றார்கள்.

இவ்வாறு மதத்தின் பேராலும், சமய நூல்கள், சாஸ்திரங்கள் புராணங்களின் பேராலும் செய்யப்படும் கொடுமைகளுக்கு அளவில்லை.

ஆயிரக்கணக்கான வருடங்களாய் மதத்தின் பெயராலும், சாஸ்திர புராணங்களின் பெயராலும் ஒரு பெரிய சமூகம் கொடுமைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆதிதிராவிடர்களாகிய உங்களைவிடத் தன்னை உயர்ந்த ஜாதியார் என்பவர்கள் [illegible]களையும் கேவலப்படுத்தாமல் விட்டார்களா? அதுவுமில்லை.

உங்களைத் தொட்டால் தீட்டுப்பட்டுவிடும், குளிக்கவேண்டுமென்பதுபோலத்தான் எங்களைத் தொட்டாலும் குளிக்க வேண்டுமென்கிறார்கள். அதோடு எங்களைச் சூத்திரர்கள், வேசி மக்கள், பார்ப்பனனுக்கு அடிமைசெய்யப் பிறந்தவர்களென்ற இழிபெயர்களுமிட்டழைக்கிறார்கள்.

இக்கேவலச் செயல்களுக்குக் கடவுளால் எழுதிவைக்கப்பட்ட சாஸ்திரம் ஆதாரமென்கிறார்கள்.

நம் மக்களுக்குள் அநேகர் எவர் எப்படிச்செய்தாலென்ன? நம் ஜீவனத்துக்கு வழியைத் தேடுவோமென்று இழிவையும் சகித்துக்கொண்டு உணர்ச்சியில்லா வாழ்க்கையிலீடுபட்டிருப்பதனால்தான் ஆயிரக்கணக்கான வருடங்களாய் இக்கொடுமைகள் ஒழிய வழியில்லாதிருந்து வந்திருக்கின்றது.

நம் ஜீவனத்துக்கு வழியைப் பார்ப்போமென்று இழிவுகளைப் பொறுத்துக் கொண்டு போகும்வரை சமூகம் ஒரு காலத்திலும் முன்னேறாது. ஜாதிக் கொடுமைகள் ஒருபோதும் ஒழிய மார்க்கமேற்படாது என்பது திண்ணம், கேளுங்கள்!

ஜாதிக் கொடுமைகளை ஒழித்துச் சமத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டுத்தான் தென்னாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றியது.

உலகத்தில் அவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன் என்று பந்தயம் போட்டுக் கொண்டு ஜாதிவித்தியாசக் கொடுமைகளை நிலைநாட்டி சமூக முன்னேற்றத்துக்கும் விடுதலைக்கும் தடையாயிருக்கும் எந்த சாஸ்திர, புராணங்களையும் சுட்டெரிக்கச் சுயமரியாதைக்காரர்கள் தயாராகவிருக்கிறோம்.

கொடுமை செய்யும் மதத்தையும்! சாஸ்திரத்தையும், கடவுளையும் ஒழிப்பதற்குப் பயந்தோமானால் நாம் நிரந்தரமாய் பறையனாயும், சூத்திரனாயும், தாழ்ந்தவனாயும் பல கொடுமைகளுக்குட்பட்டுக் கேவலமாகத்தானிருந்தாக வேண்டும்.

நம உரிமையில்லாதிருப்பதை தவிர்த்து [illegible] [illegible]

ரோஜா முத்தையா

முடியாது. அதற்குத் தடையாயிருக்கும் கடவுளும், மதமும், மோட்சமும், நரகமும் அவர்களுக்கு அக்கரையில்லை.

ஜாதிக் கொடுமைகளை ஒழிக்க நமது பெரியோர்கள் எவ்வளவோ பாடுபட்டு வந்தார்கள். சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னிருந்த கபிலர் காலத்திலும், திருவள்ளுவர் காலத்திலும், அதற்கும் பின்னரும் ஜாதியில்லை.

ஒழுக்கத்தினால்தான் உயர்வு தாழ்வு என்று எவ்வளவோ வற்புறுத்தப்பட்டு வந்தும் ஜாதிக்கொடுமைப் பேய்கள் ஒழிந்தபாடில்லை.

நமது பெரியார்கள் சொல்லியவை ஆயிரக்கணக்காகப் பிறரால் வாயளவில் பாராயணம் செய்யப்படுகின்றனவே யன்றி செய்கையில் அதனால் ஒரு பலனும் ஏற்பட்டதாய்த் தெரியவில்லை.

இன்றைக்கும் ஜாதிக்கொடுமையினால் இவன் இந்தத்தெருவில்வந்தால் தீட்டுப்பட்டுவிடும், அவன் அந்தத் தெருவில் போனால் சாமி செத்துவிடுமென்ற அபிப்பிராயங்கள்தான் தலை விரித்தாடுகின்றன.

இவ்வுலகில் பல மதக்கொடுமைகளுக்கும் ஜாதி வித்தியாச இழிவுக்குமுட்பட்டு கேவலமான மிருகத்திலும் இழிவாகக் கருதப்பட்டு பின்னால் மோட்சமடைவதைவிடச் சமத்துவம் பெறுவது தான் பிரதானமென்று சொல்லுவேன்.

ஜாதிக்கொடுமையை ஒழித்து இங்கு சமத்துவத்தைக் கொடுக்காத சாமி அங்கு மோட்சத்தையும், ரம்பை, ஊர்வசி நடனத்தையும், தங்க மெத்தையையும், சுக போகத்தையும் கொடுக்கிறதென்றால் அதை நம்புகிறவன் மடையனா என்று கேட்கிறேன்.

நம்முடைய உதவிவேண்டும்போது இந்து மதத்தைச் சேர்ந்தவர்களென்று நம்மையும் சேர்த்துப் பேசுவதும், நமது சுதந்திரத்தையும் உரிமையையும், கேட்டால் சாமி செத்துப்போகுமென்பதும் என்ன அயோக்கியத்தனமென்றுதான் கேட்கிறேன்.

தீண்டப்படாதார் தாழ்ந்தவர்கள் என்று கொடுமையாக ஒதுக்கி ஒடுக்கப்பட்டு துன்புறும் மக்களுக்கும் உயர்ந்த ஜாதியார் கடவுள் முகத்தில் பிறந்தவர்களென்று சொல்லிக்கொள்பவர்களுக்கும், குணத்தினாலும், உருவத்தினாலும், அறிவினாலும் ஏதாவது வித்தியாசமிருக்கின்றதாவென்று கேட்கிறேன்.

இவ்வாறிருக்க மக்களில் பெரும்பான்மையோரை ஜாதிக்கொடுமைகளுக்கும் இழிவுக்குமுட்படுத்திவைக்க மதப் புரட்டுகளும், புராணப் புரட்டுகளும் தான் ஆதாரமாகவிருக்கின்றன.

மக்கள் சுதந்தரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பெருந்தடையாயிருக்கும் இவ்விந்துமதத்தையும் புராணங்களையும் ஒழிக்காமல் பின் என்ன செய்வது என்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள்."

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# சென்னை தமிழிசை இயக்கம்

## 2வது ஆண்டுவிழா

சென்னை ஜார்ஜ் டவுன் ஆர்மீனியன் தெருவிலுள்ள செயின்ட் மேரிஸ் ஹாலில், 23-12-44ந் தேதி தமிழ் இசைச்சங்கத்தின் ஆதரவில், தமிழிசை இயக்கத்தின் 2-வது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. வரவேற்புக் கழகத்தலைவர் திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை அனைவரையும் வரவேற்று ஆற்றிய சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் நடைபெறும் இந்த விழாவில் இங்குக் கூடியுள்ள உங்கள் அனைவரையும் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

இந்த இயக்கத்தின் நேர்மையையும், அன்பையும், தூய்மையையும் யாவரும் அறிவர். இதில் பாஷைத் துவேஷம் இல்லை. வகுப்புத் துவேஷம் இல்லை. அரசியல் சூழ்ச்சி இல்லை. சுயேச்சையை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் ஒருவித வித்தியாசமுமின்றி இசை இன்பத்தை அனுபவிக்கவேண்டியதே இதன் நோக்கம்.

தமிழ் இசைச் சங்கத்துக்கு உதவியாகத் தமிழ்நாடெங்கும் 50 சங்கங்களுக்கு மேற்பட்டவை நிறுவப்பட்டுவிட்டன. அங்கங்கே தமிழ் இசை அரங்குகளை ஏற்படுத்திப் பொது மக்கள் இன்பம் அனுபவிக்கிறார்கள்.

மிக்க சமீபத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் ஆரம்பித்துள்ள 'சங்கீத சிரோமணி' வகுப்பைப் பற்றிக் கூறாமலிருக்க முடியவில்லை. 'இசை வாணர்' போன்ற, தமிழ்ப் பெயருள்ள, முழுவதும் தமிழ்ப் பாடல்களைப் பாடதிட்டமாகக் கொண்ட ஒரு தனிப்பட்ட பரீட்சையை ஏற்படுத்தவேண்டுமென்று சென்னைப் பல்கலைக் கழக அதிகாரிகளை இந்த சமயத்தில் நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்"

அடுத்தபடியாக இவ்விழாவின் தொடக்கவிழா வாற்றிய சர். பி. டி. இராஜன் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"பழந்தமிழர்களிடையே தனி நாகரிகமும் கலைகளும் இருந்தன என்பது பற்றி நான் சொல்லவேண்டியது அவசியமில்லை, எந்த நாட்டவர்களுடைய நாகரிகத்துக்கும் கலைகளுக்கும் அவைகள் குறைந்தனவல்ல. அந்தக்காலத்து மக்களுடைய நன்மதிப்புக்கும் பெருமைக்கும் உரியதாக இருந்தன தமிழர் நாகரிகமும் கலைகளும். ஆறாயிரம் ஆண்டுகட்கு முன்பு மக்களின் பண்பாட்டிற்கும், வாழ்க்கைச் சிறப்புக்கும் அறிவியலுக்கும் பண்டைத் தமிழர் செய்துள்ள சேவைப்பற்றியும், தமிழர் நாகரிகமே பிற நாகரிகங்களுக்கு வழிகாட்டியாக இருந்ததென்பதைப் பற்றியும் ஹீராஸ் பாதிரியார் சமீபத்தில் மதுரையில் செய்த பிரசங்கங்கள் மூலம் நன்கு அறிகின்றோம்.

சொல்லும் பொருளும் இல்லாத தனிப்பண்கள் (Music in the abstract) ஒரு சிலருக்கே இன்பமூட்டும். ஆனால் பொது மக்கள் அனைவருமே அதை அனுபவிக்க வேண்டுமானால் அவர்கள் பேசும் மொழியில்தான் இசை அமைக்கப்படவேண்டும். தேச முன்னேற்றமென்பது பொது மக்களின் முன்னேற்றமேயன்றி ஒரு சிலரின் முன்னேற்றமல்ல. ஆகவே பொது மக்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால் அவர்கள் அறிந்துகொள்ளக் கூடிய மொழியிலேயே இசையும் அமையவேண்டியது அவசியமன்றோ?

ஒரு தேசம் தன் உணர்ச்சிகளைப் பல கலைகளின் மூலம் வெளியாக்குவதால் தான் தன் பெருமையின் உச்சநிலையை அடைய முடியும். அக்கலைகளில் முக்கியமானது இசையே. ஏனென்றால் இசை தான் வேறெந்தக் கலையைக் காட்டிலும் ஒரு தேச முன்னேற்றத்துக்குத் தூண்டுகோலாய் இருக்கமுடியும்.

பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய ஒரு காரியம் நடந்திருக்கின்றது. வரவேற்புக் கழகத் தலைவரும் தமது உரையில் அதைப் பற்றிக் குறிப்பிட்டார். சென்னைச் சர்வ கலாசாலையார் 'சங்கீத சிரோமணி' பரீட்சைக்குப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள பாடதிட்டத்தில் 100க்கு 97 வீதம் தெலுங்குப் பாடல்களையும், மீதி தமிழ்ப் பாடல்களையும் குறித்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, தமிழ்மொழி அதுவும் தமிழ் நாட்டில் தான் இவ்வாறு தாழ்மையோடு நடத்தப்படவேண்டும் என ஆச்சரியப் படவேண்டி இருக்கின்றது. தமிழ்மொழி பேசும் மக்கள் நிறைந்த இந்நாட்டில், தமிழ்மொழிக்குத் தகுந்த மரியாதை தரவேண்டும் என்பதை எடுத்து வன்மையாக வற்புறுத்துகிறோம்.

## பிறப்பு

செங்கற்பட்டு, காட்டூர் வாசியான தோழர் கே. எம். ஐயாமுதலி மனைவியார் பட்டம்மாள் 8-11-44-ல் பிரசவித்த பெண் குழந்தைக்கு 10-12-44-ல் ஜெகதாம்பாள் என பெயரிட்டு "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

12-11-44-ல் பம்பாய் சென்று 17-12-44-ல் தாயகம் திரும்பும், செங்கற்பட்டு ஜில்லா காட்டூர் பெற்றோர் சங்கத் தலைவர் தோழர் கே. ஆர். கன்னியப்பன் அவர்கள் "குடி அரசு" வளர்ச்சிக்காக ரூ. 1 நன்கொடையளித்தார்கள்.

# இந்து சட்ட திருத்தம்

## சென்னை இந்து சட்ட திருத்த உட்கழகத்தின் கருத்து

சென்னை தமிழர் நல் வாழ்க்கைக் கழகம் நிறுவிய இந்து சட்டச் சீர்திருத்த உட்கழகம் இராவ் உட்கழகத்தார் வெளியிட்ட இந்து சட்ட திருத்தத்தை கூர்ந்து நோக்கி அதன் பால் அறிவிக்கப்பட்ட கருத்தின் சுருக்கம் பின்வருமாறு:

இந்து சட்டத்தில் திருத்த வேண்டியவைகள் பல இன்றியமையாது இருத்தலின் இந்து சட்டம் திருத்தப்பட வேண்டியது வரவேற்கத் தக்கதும் விரும்பத் தக்கதுமேயாகும். முடிவுரையில் கூறியபடி இந்து சட்டம் முழுமையும் திருத்த வேண்டியே இராவ் உட்கழகம் விரும்பியிருக்கும். சில முக்கிய பகுதிகள், அதாவது கடனும் பொறுப்பும் சொத்தை அடகுவைக்கும் உரிமையும், சொத்தைப் பங்கிடும் உரிமையும், வாரிசுகள் சொத்தை அடைவதற்கு முன் வாழ்க்கைச் செலவு பெறும் உரிமையும், மற்றும் பங்கீடு, தருமத்திற்காக சொத்தை வழங்குதல் முதலியன இத் திருத்தத்தில் சேர்க்கப்படவில்லை. ஆகவே, இவைகளையும் சேர்த்து முழு இந்து சட்டமும் திருத்தப்பட்டு மத்திய சட்ட சபையிலும், மாகாண சட்ட சபையிலும் நிறைவேற்றப்பட்டு சட்டமாகுதல் தான் சாலச் சிறந்ததெனக் கருதப்படுகிறது.

இந்துக்கள் என பொதுவாகப் பலர் அழைக்கப்பட்டாலும் அவர்களது நடை, உடை, உணவு, மொழி, பழக்க வழக்கம் முதலியவைகளை நோக்க இவர்கள் பல்வேறு பிரிவினரென்பதும், மொழி வேறுபாடுடையவர்களென்பதும் வெளிப்படை. ஆகவே இவர்கள் அனைவருக்கும் ஒரே சட்டம் வகுக்க முயலுவது நாட்டு சமூக முன்னேற்றத்திற்கும் பொதுவாக இட்டத்திற்கும் பெருந்தடையாகுமாதலால் திருத்தங்கள் காலத்தை ஒட்டியும் முன்னேற்றமான கொள்கைகளை வரவேற்றும் செய்யத்தக்கவைகள் தான் வேண்டற்பாலதாகும்.

### பழக்க வழக்கம்

பழக்க வழக்கங்களைப் பாகுபடுத்தி இன்னின்னவை தாம் ஏற்கத் தக்கவையென முடிவு செய்வதுதான் நல்லது. இல்லையேல் பழக்க வழக்கங்கள் தோன்றுவது மிகு சுலபம், ஆனால் அவைகளை உறுதிப்படுத்தவும் உறுதிப்படுத்த மறுப்பதும் பல பெரும் இடுக்கண்களை மக்கள் பால் அடையச் செய்யும்.

### சாதிப் பிரிவு

இந்துக்கள் அனைவருக்கும் ஒரே விதச் சட்டம் செய்யும் [illegible] சாதிப் பிரிவினைகளை ஏன் இந்தத் திருத்தத்தில் சேர்க்கப்பட வேண்டியிருக்கிறது? மேலும் இப் பிரிவினைகள் உயர்வு தாழ்வைக் குறிப்பதால் ஒற்றுமைக்கு மார்க்கமில்லை. மற்றும் பிராமணரல்லாதார் சிலர் அய்யங்கார் அய்யர் என அழைக்கும்படிச் செய்து வருகிறார்கள். இன்னும் சில காலத்தில் பிராமணர் யார் மற்றவர் யார் என சொல்வதற்கில்லாமல் முடியும். ஆகவே இந்தத் திருத்தத்தில் சாதிப் பிரிவினையை அடியோடு களைந்துவிடுதல் நலமாகும்.

### பங்கிடாத சொத்துக்கு வார்சு

சொத்தைப் பங்கிடும் முறையிலும், சொத்தைப் பெறுவதற்கு முறையாக உரியவர்களை வகுப்பதிலும், மத சம்பந்தமான தொடர்பேயிருத்தல் கூடாதாகும். சட்டத்தில் திருத்தம் இயற்றப்படுவது ஒரு மாற்றத்திற்காக மட்டுமிருத்தல் போதாது. அத்திருத்தம் மக்களுக்கு நன்மைபயப்பதாயும் இதுவரையில் மக்களுக்கு விளைந்துவந்த கொடுமைகளை அறவே நீக்கத்தக்கதாயுமிருத்தல் இன்றியமையாததாகும்.

குடும்ப சொத்தை பங்கிடுகையில் குடும்பமக்கள் அனைவரும் ஒன்றாகக் கருதி சரிபங்கு வழங்கவேண்டும்.

தாசி மக்களுக்கும், சட்டப்படி மணமாகாத மாதுக்கு பிறந்த மக்களுக்கும், இவர்களைப் பெற்றோர் வாழ்க்கைச்செலவுக்கும் வயது வந்ததும் பாகத்தில் ஒரு பகுதியும் கொடுக்கப்படுவதை ஏனோ தடைசெய்ய சட்டம் திருத்தப்பட வேண்டும்? பெற்றோர்செய்த குற்றம் ஏனோ பிள்ளைகளைச் சாரவேண்டும்?

இந்து மகளிர் சொத்துரிமைச் சட்டப்படி இறந்த மகனது மனைவிக்கும் அவனுக்கு முன்பு இறந்த அவன் மகன் மனைவிக்கும், அவனுக்கு முன்னர் இறந்த அவனது மகனது இல்வாழ்க்கைத் துணைவிக்கும் சொத்தில் பங்கு கிடைக்கும்போது, மகன், பேரன், பேரனுக்கு பேரன் ஆகியவர்களின் துணைவிகளை சொத்து பங்கீட்டில் சேர்த்துக் கொள்வதற்கு என்ன தடை?

ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடின்றி ஒன்றாக கருதவேண்டியதின்னமையேற்பட்ட இக்காலத்தில் மகனது மகனையும் மகனது மகளையும் வாரிசாக ஏன் ஏற்றல் கூடாது? உடன் பிறந்தவளையும் உடன்பிறந்தானுடன் பங்கிட்டுக்கொள்ளுதல் ஏன் கூடாது? உடன் பிறந்த மாணிகரது மகனும் மகளும் உடன் பிறந்த மகனது மகனும் மகளும் சொத்தில் பங்கு கொள்வது சரியே.

ஒவ்வொரு விதவையும் ஒரு பங்கு பெறுதல் வேண்டுமேயல்லாது எல்லா விதவைகளுக்கும் சொத்தில் ஒரு பங்கை பகிர்ந்து கொடுத்தல் கூடாது.

பாகம் பிரிந்த மகனும் பிரிவினை அடையாத மகனும் சரிபங்கு பெறுதல் கூடாது. இது பாகப் பிரிவினையை முன்கூட்டி முடிக்க முயல ஏதுவாகும்.

மணம் முடிந்த மகளுக்கும் மணமுடியாத மகளுக்கும் சொத்தை பங்கிடும் போது மணமாகாத மகளுக்கு மணத்திற்காக சொத்தை ஒதுக்கி மிகுதியை பகிர்ந்து கொடுத்தல் வேண்டும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் பங்கீடு செய்தலின் அளவு தவிர்த்து சமஉரிமை வழங்குவதில் சம்மதித்தபிறகு மகன் வழியிலும் மகள் வழியிலும் தோன்றும் மக்களுக்கு அதே முறையை கையாளுதல் வேண்டற்பாலதே.

"ஆசாரியர்," "சேடர்;" "சப்பிரம்மாச்சாரியர்" முதலியன பொருள் தானதனையையும் அறிந்துகொள்ள இயலாதவைகளாயும் இதுபோது இருத்தலால், அந்த சட்டம் இதற்குமுன்னர் எப்போதாவது நடைமுறையிலிருந்தாலும் இனி இருக்க நேர்மையற்றதாகும்.

நெருங்கிய உறவினரில்லாமல் இறந்தவர் சொத்து, அறத்துறை தரும சங்கங்களுக்கு வழங்கி அதனை ஏழை மக்களுக்கும் நோயாளிகளுக்கும் பயன்பட சட்டம் வகுக்கவேண்டும்.

துறவிகள், பரதேசிகள், சந்நியாசிகள் இவர்களுக்கும், இவர்களுக்குப்பின் இவர்கள் தகுதியைப்பெற ஒருமுறை பண்டைக்காலத்திலிருந்து வந்தது. அந்த சட்டம் மற்ற திராவிட சட்டங்களுடன் மறைந்துபோயது.

குடும்பச்செலவு இவர் மகன்களுக்குள் ஒரு சிலருக்கு மணம் முடிந்தும் சிலருக்கு மணம் நடைபெறாதிருந்தால், நேர்மையான பணத்தை மணமாகாத மகன்களுக்காக ஒதுக்கியதுபோக மிகுதியைக் கொள்ளல் வேண்டும்.

குடும்பச் செலவுக்கு பணம் எடுத்துக் கொள்ளுமுன் சொத்தின்மீது கடனிருந்தால் அதனை முன்னதாக கொள்வது தான் நேர்மையுடையதாகும்.

### மணமும், விலக்கும்
### தெய்வீக மணம்

"வழக்கமான சடங்குகள்" என்பது விளக்கப்படாததும் அறியப்படாததுமாகும். மணமுறைகள் வகுப்பார்களுக்கும், மக்கள் மக்களுக்குள்ளும் குடும்ப குடும்பங்களுக்கும் வேறுபாடுகள் உள. மேலும் மணச்சடங்குகளைக் குறைத்தும் மணமக்களது தாய்மொழியில் மணச்சடங்குகள் நடைபெறவேண்டுமென்றும் மணமக்களுக்கும், வந்திருப்பவர்களுக்கும் தெரியாத மொழி

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மந்திரங்கள் தேவையில்லையென்றும் கருதப்படும் இந்நன்னாளில் இவைகளிலிருந்து விடுபட வேண்டியதற்கான வைகளை தகாதவையென விலக்கிச் சொல்லில் சடங்குகளேயிருந்தாலும் எம்மொழியிலேனும் மணமுறை நடத்தலாமென்றும், மணம் யாராவது நடத்தலாமென்றும், மணம் முடிக்க பெற்றோராவது, உறவினராவது, நண்பராவது தக்காரெனவும் வரையறுத்து விட வேண்டும்.

முடிந்த மணத்தை மணச்சடங்குகள் சரிவர நடைபெறாத ஒரு காரணத்திற்காக சரியான முறையில் மணம் முடியவில்லையென்று கருதுதல் கூடாது.

## பதிவு மணம்

மணம் செய்துகொள்ளப் போரும் மக்கள் பிறந்த இடத்திற்கு அருகிலிருந்தால் பெற்றோர்களிடமாவது, மற்ற உறவினரிடமிருந்தாவது சம்மதம் வேண்டியதை பெறமுடியும். குறிக்கப்பட்டுள்ள உறவினரில்லாத மணம் செய்துகொள்ளவிருக்கும் மணமக்கள் எப்படி சம்மதம் பெறமுடியும்.

## மணமகளுக்கு பேற்றோர் பணம்

மணமகனது உறவினரிடம் மணமகளுக்காகக் கொடுக்கப்படும் சொத்தும் பணமும் மணமகளது செலவுக்காக என அறிவிட்டுவைத்திருக்கும். ஆனால் மணமகன் தன் பெயருக்கு அந்த சொத்தையோ பணத்தையோ மாற்றிக் கொடுக்க செய்து கொண்டால் அது மணமகளது சொந்த செலவுக்காக என அறிவிட்டு கூற முடியாது. அதனால் சேரிடும் தடையை எப்படி தடுப்பது.

## மண விலக்கு

மண விலக்கு இந்த சட்டத்திற்கு புதியதல்ல. எல்லா மக்களிடையிலும் இப்பழக்கம் பண்டைக்காலத்தில் இருந்து வந்தது இப்போதும் சிலவிடங்களில் சில மரபினர் கையாண்டும் வருகின்றனர். இவைகள் எல்லாவற்றிலும் ஒரு மகன் ஒரு மனைவியைத்தான் கொள்ள வேண்டுமென்ற உறுதிபாடு ஏற்பட்டவுடன் மண விலக்கு இன்றியமையாததாக ஆயது. மண விலக்கு சில குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட முக்கியமான காரணங்களுக்கு மட்டும்தான் கையாளச் செய்தல் வேண்டும்.

கணவன், தலைவிபது நீங்காத பிணியின் பொருட்டும், குஷ்டம் முதலிய கொடும் வியாதியின் நிமித்தமும் மண விலக்கு செய்வதற்கு முன் தலைவிக்குத் தக்க குடும்ப செலவுக்கு வகை செய்தல் வேண்டும்.

## இளைஞரும் அவர்களைக் காப்பாரும்

இப்போதும் உயர்நீதிமன்றத்திற்கு இளைஞர்களைக் காக்க பொறுப்பாள ஒருவரை ஏற்படுத்த உரிமையிருக்கிறது. இதனையே வெளியூர்களிலுள்ள நீதி மன்றங்களும் வழங்குவதில் தவறில்லை.

பத்திரங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட காப்பாளரும் சொத்தைப் பரிபாலித்து வர ஏற்படுத்தப்பட்டவர்களும் உத்திரவு பெற்று சொத்தின் மீது கடன் முதலியன வாங்க உரிமை வழங்கலாம்.

## மக்களைத் தழுவுதல்

மக்களைத் தழுவிக்கொள்ளும் பழக்கம் திராவிடர்களுக்குள்ளே இருந்து வந்திருக்கிறது. ஆனால் இது பார்வைக்கு ஆரிய முறையாக காணப்பட்ட போதிலும் மக்களைத் தழுவிக்கொள்ளும் பழக்கம் திராவிடர்களுக்கு அவர்களது தலைவழி தவறாது இருக்கவேண்டுமென்ற ஒரு காரணம் கொண்டே அல்லாமல் ஆரிய முறையைப் போல சமய சம்மந்தமும் சுமிருதி முதலிய சாத்திரத்தில் கூறிய சடங்கு முறைகளைக் கொண்டதும் அல்லவாகும். ஆங்கில அரசியலரால் ஏற்படுத்திய நீதிமன்றத்தில் திராவிடர்களை உள்ளிட்ட எல்லோருக்கும் சட்டம் வகுக்கையில் ஆரிய முறையையே மற்றவைகளுக்கு வகுத்த மாதிரி இந்த மக்களைத் தழுவிக்கொள்ளும் முறையிலும் அநேக மதகளுக்குப் பொருத்தமில்லாத வகையில் சட்டமாக எல்லோருக்கும் செய்தனர்.

கொழும்பிலுள்ள தமிழர்கள் ஆரியர்கள் குடியேறுவதற்கு முன்னரும் சுமிருதியும் சட்டமும் எழுதப்படுவதற்கு முன்னரும் மக்களைத் தழுவிக்கொள்ளும் முறைக் கையாண்டு வந்திருக்கின்றனர். மேலும் பிள்ளைகளைத் தழுவிக்கொள்ளுதலுக்கு முக்கியமான சடங்கு தமிழர்களுக்குள் இருந்து வந்தது. "மஞ்சள் நீரைக் குடிக்கிறது" குழந்தையின் பெற்றோரும் தழுவிக்கொள்பவர்களும் நெருங்கிய உறவினரும் மஞ்சள் கலந்த நீரை ஒரு கோப்பையில் வைத்து அதற்குள் அவர்கள் கைவிரல்களை விட்டு பின்னர் அந்நீரைப் பருகுவர். இந்நீர் ருந்து தழுவிக்கொள்ளும் முறை பண்டைத் திராவிடரது முறை யென்பது விளங்கும். இந்த முறை இன்னும் [illegible] முறையிலிருந்து வருகிறது. [illegible]

கொடுப்பதும் வாங்குவதென்பதும் தேவையில்லை, ஏனென்றால் அனாதை குழந்தைகளையும் தழுவிக்கொள்ள தடை வேண்டியதில்லை யாதலாலே.

விதவை, குழந்தையை தழுவிக் கொள்வது புதிதல்ல. கொழும்பில் வசிக்கும் தமிழருக்குள் தலைவரோ தலைவியோ அல்லது இருவரும் சேர்ந்தோ குழந்தைகளைத் தழுவிக் கொள்ளும் பழக்கம் இருந்து வருகிறது.

பெண் குழந்தைகளைத் தழுவிக் கொள்ளுவதில் தடையிருக்க நேர்மையில்லை. ஏனென்றால் இதுபோது ஆணையும் பெண்ணையும் சமமாகப் பாவிக்கவேண்டுமென்ற உணர்ச்சி மேலிட்டு வரும்போது, 'ஆண்' என்ற சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக, "மகள், மகன் அல்லது மகவு" என்ற சொற்களைச் சேர்க்கவேண்டும்.


# தலைவர் படங்கள்

பெரியார், அண்ணாதுரை, நெடுஞ்செழியன், டாக்டர் ஜனார்த்தனம், அன்பழகன் இவர்களது படங்கள் தயாரிக்கிறது. ஒன்றின் விலை 0—1—0. வேண்டுவோர் எழுதுக; தக்க லாபமுண்டு. எல்லா "குடி அரசு", "திராவிட நாடு", "திராவிட மணி" ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும். கடிதம் எழுதுவோர் தங்களது முழு முகவரியை தெரிவிக்கவேண்டும்.

திராவிடன் பதிப்பகம்,
133-லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)


## திராவிட மாணவர் கழகம்

விருத்தாசலத்தில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் என்ற பெயரால் இருந்து வருவதை "திராவிட மாணவர் கழகம்" என்று மாற்றியமைக்க மாணவர்களின் கூட்டமொன்று விருத்தாசலம் திராவிடர் கழகத்தில் 9-1-45-ந் தேதி மாலை 5 மணிக்கு நடைபெறும். எல்லா மாணவத் தோழர்களும் வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். சையத் இஸ்மாயில்

## ஈரோடு ஷண்முகவேலாயுதம்

சென்னை, ஜன. 3—

ஈரோடு தோழர் பி. ஷண்முகவேலாயுதம் இன்னும் சுமார் 3, 4 வாரங்களுக்கு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி ஹவ்லக் வார்டில் சிகிச்சை பெற்று வருவாரெனத் தெரிகிறது.

இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் கழகத்தின் கௌரவ செக்ரெட்டரி பதவியை நாம் 5-12-44-ந் தேதி ராஜினாமா செய்துவிட்டதாகக் கொழும்பு [illegible] தெரிவிக்கிறார்.

ரோஜர் முத்தையா

## வேண்டுகோள்

திருச்சி தோழர்களுக்கு,

தோழர்கள் டி. எம். தங்கராஜ், டி. எம். முத்து (பட்டுநூல்காரத் தெருவு லாண்டரி) டி. எம். விசுவலிங்கம் ஆகியவர்கள் திருச்சி தோழர்களுக்கு வெளியிட்டுள்ள வேண்டுகோளில், பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருவதற்குள் திருச்சி ஜில்லா, தஞ்சை ஜில்லாவை முந்திவிடச் செய்ய வேண்டுமென்றும், குறைந்தது 6000 அங்கத்தினராவது திராவிட கழகத்தில் சேர்த்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்ட வேண்டாமா?, என்று கேட்டிருக்கிறார்கள். அங்கத்தினர் புத்தகம் வேண்டுவோர் வக்கீல் தோழர் டி. பி. வேதாசலம் அவர்களிடம் பெற்றுக்கொள்ளவும்.

## சேலம் திராவிடர் கழக 2-ஆம் ஆண்டு விழா

செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழக 2-ஆம் ஆண்டு விழா 14-1-45 ஞாயிற்றுக்கிழமை தேவாங்க பாடசாலையில் நடைபெறும். அதுசமயம் ஈரோடு எஸ். மீனாட்சிசுந்தரம் பி. ஏ., எல். டி., அவர்கள் தலைமை தாங்குவார். அதுகாலை தோழர்கள் கே. அன்பழகன், மாணவர்கள் தவமணி இராசன், தியாகராசன், இளவழகன், வீரமணி, எழிற்கோ மற்றும் பலர் கலந்து கொள்வார்கள். அன்று மாலை 7 மணிக்கு மார்க்கெட் மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

## கோவை ஜில்லா திராவிடர் கழகம் நிர்வாகக்கமிட்டிக் கூட்டம்

ஈரோட்டிலுள்ள கோவைஜில்லா திராவிடர் கழகக் கட்டிடத்தில் மேற்படி கூட்டம் 21-1-45-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். மேற்படி கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் இதனையே அழைப்பாகக் கொண்டு தவறாது வர வேண்டுமாய்க் கோரப்படுகிறார்கள்.

என். அர்ச்சுனன், தலைவர்.
ப. பழனிச்சாமி,
எஸ். ஆர். சந்தானம்,
காரியதரிசிகள்.

ரோஜா முத்தையா

இந்தப் புதிய ஆண்டில்

நீங்கள்

★

செய்துகொள்ள வேண்டிய

நன்முடிவு

யாதெனில்

★

“மே. த. கவர்னரின்
யுத்த நிதிக்கு

நான் மாதந்தோறும் நன்கொடை
அளித்து வருவேன்”

என்பதுதான்

## திராவிட மாணவர் மாநாடுகள்

பண்ருட்டிக்கடுத்த புதுப்பேட்டையில் 3-2-45 அன்று தென்னார்க்காடு மாவட்ட திராவிட மாணவர் மாநாடு நடைபெறும். தலைவர்: ஈ. வெ. கி. சம்பத், திறப்பாளர்: இரா. இளம்வழுதி, கொடியேற்றுபவர்: பி. ஜனார்த்தனம், சொற்பொழிவாளர்கள்: பெரியார் ஈ. வெ. ரா., சி. என். அண்ணாதுரை, ஆர். நெடுஞ்செழியன், கே. அன்பழகன், எஸ். தவமணிஇராசன், கோ. சி. பெரியசாமிப் புலவர், பாரதிதாசன், ஈ. வெ. கி. மிரண்டா, டி. சி. எஸ். மணியன், நைனா முகம்மது, கே. ஏ. மதியழகன், இளவழகன், வீரமணி, தமிழரசன் ஆகியபலர். இசைவாணர் டி. வி. நமசிவாயம் அவர்களால் இன்னிசையரங்கு நிகழும்.

வரவேற்புக்குழு தலைவர்: எஸ். கோவிந்தசாமி.

வரவேற்புக்குழு செயலாளர்: ஏ. ஆர். சி. இராமலிங்கம்.

*

9-2-45 அன்று திருச்சியில் திராவிட மாணவர் மண்டில மாநாடு நடைபெறும். தலைவர்: பி. ஜனார்த்தனம், திறப்பாளர்: பெரியார் ஈ. வெ. ராமசாமி, கொடியேற்றுபவர்: குடந்தை தவமணி இராசன். அறிஞர் பலரும் விரிவுரையாற்றுவார்கள்.

வரவேற்புத் தலைவர்: எம். கசபத் இஸ்மாயில்.

வரவேற்புச் செயலாளர்: டி. சி. எஸ். மணியம்.

'குடி அரசு'

1945-ஆம் ஜனவரி-மீ 6-உ.

# தாழ்த்தப்பட்டோர் ஹிந்துக்களா?

ஹிந்து மதம் என்றால் ஆரிய மதம் என்றும், ஹிந்துக்கள் என்றால் ஆரியர்கள்தான் என்றும் நாம் பல நாட்களாக கூறி வருகிறோம். அதனாலே, திராவிடர்களாகிய நாம் நம்மை ஹிந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடாதென்றும், ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடாதென்றும் சொல்லிவருகிறோம். அந்தப்படியே, திருவாரூரில் 1940ல் பெரியார் தலைமையில் நடந்த ஜஸ்டிஸ்கட்சி மாகாண மாநாட்டிலும் திராவிடர்களாகிய நாம் ஹிந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடாதென்றும் ஹிந்து மதத்தைச்சேர்ந்தவர்கள் அல்லவென்று சொல்லிக்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஏன் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது என்பதுபற்றி நாம் அப்பொழுதே விளக்கியிருக்கிறோம். எனினும், இப்பொழுது மீண்டும் நாங்கள் ஹிந்துக்கள் என்றும், தங்கள் சமூகத்தார் ஹிந்துமதத்தை விட்டுவிலகக் கூடாதென்றும் ஒரு சிலர் பேசி வருவதால் இதைக் குறித்து நாம் சற்று மீண்டும் விளக்க ஆசைப்படுகிறோம்.

ஹிந்துக்கள் எனப்படும் பெயர் ஹிந்துஸ்தானத்தில் வசித்த ஆரியர்களை வேறு நாட்டார் அழைத்த பெயராகும். ஹிந்துக்கள் என்ற பெயருக்கு ஏற்ற பொருளை விளக்கும் ஆரிய வேத எதுவும் இல்லை. ஹிந்து மதம் என்ற ஒரு மதம் இருப்பதாகக் கூறுவதற்கும் ஆதாரம் இல்லை. ஹிந்துஸ்தானத்தில் வசித்த மக்களால் கையாளப்பட்ட மதத்திற்குப்பெயர் ஹிந்துமதம் என்று வெளிநாட்டார்களால் அழைக்கப்பட்டு வந்தது என்பதைத்தான் அறியக்கூடும். அகராதிகளிலும் ஹிந்து என்ற சொல்லுக்கு ஹிந்துஸ்தானத்தில் வசிப்பவன் என்றும், இப்பொழுது, இந்தியாவில் மகமதியர்களை எதிர்த்து பிராமணீயத்தை ஆதரித்து அதை ஒப்புகிற இந்திய மக்களை பொதுவாக குறிக்கிற சொல் என்றும் காணப்படுகிறது. மற்றும் சநாதன தர்மானுசாரத்தை அனுஷ்டிக்கிறவனைக் குறிக்கும் சொல் என்றும் பொருள் கூறப்படுகிறது. மேலும் பாரசிகமொழியில் இந்து என்ற சொல் திருடன் என்னும் பொருள் தருவதாகவும் கூறுகிறார்கள்.

எனவே, எந்த வகையில் எடுத்துப்பார்த்தாலும், ஹிந்து என்ற சொல்லானது ஒரு குறிப்பிட்ட பொருளை உடையதல்லவென்பது விளங்கும். அதோடுமட்டுமல்ல, ஒரு கூட்டத்தாரையும் அவர்கள் பின்பற்றி வந்த மதத்தையும் குறிக்கும் சொல்தான் அது என்பதையும் விளங்கிக்கொள்ளலாம். இச்சொல் அந்தக் கூட்டத்தாரையும், அவர்கள் பின்பற்றி வந்த மதத்தையும் குறிக்கிறது என்று நாம் சொல்லவேண்டிய அவசியமில்லை. அன்னியர்களால் அப்படி அழைக்கப்பட்ட கூட்டத்தார்தான் ஆரியர்கள். ஏனெனில், அன்னியர்கள் இந்தியாவின் மீது படையெடுக்கவோ குடியேறவோ ஆரம்பித்தது ஆரியர்களுடைய வருகைக்குப் பின் என்பது தான் சரித்திரம் காட்டுகிறது. இந்தியா என்ற இவ்வுபகண்டத்தில் குடியேறியவர்கள், படையெடுத்தவர்கள், அக்காலத்தில் ஜலமார்க்கமாக வந்ததாயல்லாது கடல் மார்க்கமாக வரவேயில்லை. நில மார்க்கமாக, வடமேற்கு வடகிழக்கு வழிகளின் மூலமாகவே வந்திருக்க வேண்டும். முதன் முதலில் குடியேறியவர்கள் வடமேற்குக் கணவாய்களின் வழியே நுழைந்தார்கள் என்பதையும் சரித்திர வாயிலாக அறியலாம். முதன் முதலாக குடியேறியவர்கள் ஆரியர்கள். இவர்கள் இவ்வுபகண்டத்தின் வட பகுதியில் குடியேறிய பிறகு; இவர்களுக்குப் பின்னால் வந்தவர்கள் யாவரை ஹிந்துக்கள் என்று அழைத்திருப்பார்கள் என்று எண்ணிப்பார்க்கும் சாதாரண மக்களுக்கும் ஆரியர்களைத்தான் இவ்வாறு அழைத்திருப்பார்கள் என்பதும், அவர்கள் பின்பற்றிய மதத்தையே ஹிந்து மதம் என்று அழைத்திருப்பார்கள் என்பதும் விளங்கும்.

ஆரியர்கள் எத்தகையவர்கள் ஆரியமதம் எத்தகையது என்பதை இன்னும், இந்த நாளிலும் விளக்க வேண்டும் என்று நாம் கருதவில்லை

நாம் இன்று இந்நிலையிலிருந்து வருவதற்கும், நாம் அன்னியருக்கு அடிமையாய் சுதந்திரமிழந்திருப்பதற்கும் எது காரணம்? ஆரியம் விதைத்த விதையல்லவா! எல்லோரும் ஒரு குலம் யாவரும் கேளிர் என்று வாழ்ந்த இந்நாட்டு மக்களுக்குள் நான்கு வருணங்களையும் நூற்றுக் கணக்கான சாதிப் பிரிவுகளையும் உண்டுபண்ணி நாட்டின் ஒற்றுமையைக் குலைத்து ஆட்டிச் சுவாராக்கியது அவர்கள்! இவ்வாரியர்களன்றோ? இவ்வாறு பல வருணங்களாகவும், பல சாதிகளாகவும் பிரித்து வைத்ததால், அவரவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் யாதொரு தொடர்புமில்லை, அவனவன் அவனுடைய கர்மத்தை செய்துவர வேண்டும் என்று கருதும்படி செய்துவிடவில்லையா! இதனாலன்றோ நம்மவர்கள் நாட்டைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ எத்தகைய கவலையுமில்லாமல் இருந்துவிட்டார்கள். இதனால், இவ்வுபகண்டத்தின் மீது படையெடுத்தவர்களுக்கும், இவ்வுபகண்டத்தில் குடியேற எண்ணியவர்களுக்கும் எளிதாகிவிட்டது. அதன் பயனாக, சுதந்திரமாக இருந்துவந்த நாம், எவரும் அஞ்சுமாறு ஆட்சி செலுத்திய நாம், உலகிற்கே நாகரீகத்தைக் கற்பித்த நாம், இன்று நாடிழந்து, நகரிழந்து, மானமிழந்து, கதியிழந்து, ஆரியத்துக்கும் அன்னியனுக்கும் அடிமையாய் இருந்து வருகிறோமென்றால் அது மிகையாகாது.

உண்மையிலே, இவ்வுபகண்டம் விடுதலையடையவேண்டும், இவ்வுபகண்டத்திலுள்ள மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென்றால், நம்மை இன்று இந்நிலைக்குக் கொண்டு வந்தவைகளை உதறித்தள்ளவேண்டாமா என்பதை எண்ணிப்பாருங்கள். எனவே தான், திராவிடர்களாகிய நாம் ஹிந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளக் கூடாதென்றும், ஹிந்து மதத்தை—

# திராவிடர் கழகத்திற்கு
## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)
## 6-1-45ந் தேதி வரை 22426-அங்கத்தினர்கள் ரூ. 2421—4—0 சந்தா

ஜனவரி மாதம் 6ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. தஞ்சை | 4213 | 9. வட ஆற்காடு | 1181 |
| 2. திருச்சி | 3498 | 10 மதுரை | 1023 |
| 3. சேலம் | 3285 | 11. செங்கல்பட்டு | 488 |
| 4. கோவை, உதகை. | 2040 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சில்நாடு) | 137 |
| 5. இராமநாதபுரம் | 1741 | 13. பெங்களூர் | 100 |
| 6. திருநெல்வேலி | 1625 | 14. புதுக்கோட்டை | 59 |
| 7. சென்னை | 1574 | 15. இலங்கை | 13 |
| 8. தென் ஆற்காடு | 1449 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 22426. சந்தா ரூ 2421-4-0

ஹிந்து மத தர்மாச்சாரங்களைப் பின் பற்றக் கூடாதென்றும், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் டாக்டர் அம்பேத்கார் அவர்களும் பிரமுழக்கம் செய்து வருகிறார்கள். உள்ளபடி, தங்கள் சமூகம் முன்னேறவேண்டும், மனிதர்களாக, தன்மானமுள்ளவர்களாக வாழவேண்டுமென்றால், யாரும் இந்த முடிவுக்குத் தான் வருவார்கள்.

இதனைத் தான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சென்ற 4-1-45-ஆம் தேதி கல்கத்தாவில் தாழ்த்தப்பட்டோர் வாரப் பத்திரிகையான 'பீப்பிள்ஸ் ஹெரால்டை' திறந்து வைக்கையில்,

"ஹிந்துக்கள் புல்லுருவிகள், நாம் உழைக்க அவர்கள் உறிஞ்சித் தின்கிறார்கள், இந்த நாண்டனை நிலை நாட்டும் சுதந்திரம் வந்தாலும் ஒன்றுதான், வராதொழிந்தாலும் ஒன்றுதான்"

என்று வயிறெரிந்து கூறியிருக்கிறார்.

இதைக் கண்டு, பிறர் இரத்தத்தை உறிஞ்சி வந்த கூட்டம், சுகத்தில் அழுக்குப்படாமல் வாழ்ந்து வந்த கூட்டம், கிழிந்த பஞ்சாங்கத்தையும் காய்ந்த தர்ப்பைப் புல்லையும் கைமுதலாகக் கொண்டு வாழ்க்கை நடத்தி வரும் கூட்டம் வயிறு எரியத்தான் செய்யும், சீறி விழத்தான் செய்யும். இதைக்கண்டு யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இத்தனை ஆயிரமாண்டுகளாக நம்மை மண்டூகங்கள் என்றுகருதி நம்மை இழிவுப்படுத்திச் சுகவாழ்வு நடத்திவந்தவர்களுக்குச் சுகவாழ்வை விட்டுவிடுவதென்பதோ, அவர்களது வாழ்க்கையைப்பிறர் குறை கூறுவதென்பதோ சகிக்கக்கூடியதாகயிருக்காது. அதனால் அவர்கள் ஆத்திரங்கொள்வர், அடக்கப்பார்ப்பர், அதிகாரத்தின் ஆதரவை நாடுவர், வசைபுராணம் பாடுவர். இவைகளைக் கண்டு எவரும் வியப்புறவேண்டியதில்லை. உலகினில் இது இயல்பு. கள்வனைக் கள்வன் என்று சொன்னால் ஆத்திரங் கொள்ளாமல் இரான். குச்சுக்காரியைக் குச்சுக்காரியென்று சொன்னால் அவள் குதித்தெழாமல் இராள். அதுபோலவே, பிறர் உழைக்க, தாங்கள் அட்டைபோல் அவர்களது இரத்தத்தை உறிஞ்சி வாழ்ந்த கூட்டத்தை நோக்கி, 'புல்லுருவிகளே!' என்று சொன்னால் ஆத்திரங்கொள்வார்கள். ஆனால், சுரண்டப்படுகிறவர்களிலே, உறிஞ்சப்படுபவர்களிலே, ஒரு சிலர் ஆத்திரப்படுவதென்றால், இவர்களைக் குறித்து நாம் என் சொல்வது! இவர்கள் அறியாமைக்கு இரங்குவதா அல்லது நடித்த தோழர்கள், இன்னும் இவர்களுக்கு உறைக்கவில்லை என்று இவர்களை விட்டுவிடுவதா, என்று நாம் சும்மா இருந்துவிடுவோமேயானால், இவ்வாறு வாளாது இருந்திருந்தால் தான், இவ்வுபகண்டத்தில், ஆரியத்தை எதிர்த்து நடந்த கிளர்ச்சிகள், இயக்கங்கள் யாவும் அடங்கி ஒடுங்கி, அழிந்து ஒழிந்து போய் விட்டன. இன்னும், இம்முறை இவ்வுலகப் போரில் கையாளப்பட்டு வருவதையும் காணலாம். போரிலீடுபட்ட இருகட்சிகளும் ஒருவர் பலத்தை மற்றொருவர் குறைப்பதற்கு எதிரிநாட்டிலேயே அவர்களையே எதிர்க்கும் ஒரு கூட்டத்தை உண்டு பண்ணி வருவதையும், அதை ஆதரித்து வருவதையும் பார்க்கிறோம். அதுபோலவே, இந்நாட்டிலும் செய்யப்பட்டு வருகிறது. அதென்னவென்றால் ஆரியத்திற்கு எதிர்ப்பு பலப்படுகிறதையும் அதை அழிக்க முயற்சிகள் நடைபெற்று வருவதையும் கண்டவர்கள், எதிர்க்கிறவர்களிடையே, ஒரு பிரிவினைக் கூட்டத்தை உண்டுபண்ணி அவர்களைக் கொண்டே தங்களை எதிர்ப்பவர்கள் மீது மோதவிடலாம் என்று எண்ணி செய்யப்படும் காரியமாகும். ஆதலால் இக்கூட்டத்தாருக்காக இரங்கலாமா?

இப்போரில், ஆரியத்தை எதிர்த்து நடைபெறும் இப்போரில், ஆரியத்தை எதிர்ப்பவர்கள் வெற்றி பெறவேண்டுமானால், ஆரியர்களை எதிர்க்க படையைத் திரட்டுவதற்கு முன், திட்டம் வகுப்பதற்கு முன், இவர்களை, இந்த "குவிஸ்லிக்கு"களை முதலில் நீக்க வேண்டும். இவர்களைத் திருத்த வேண்டும்; இவர்களை திருத்த முடியாவிட்டால், இவர்களை மக்களுடைய தொடர்பிலிருந்து, மக்கள் யாவரும் விடுதலையாகும் வரையிலாவது, நீக்கி வைக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் நாம் எவ்வளவுதான் பாடுபட்டாலும், ஒன்றும் பயனளிக்காது. ஓட்டையுள்ள தோண்டியால் எவ்வளவுநேரம் நீர் இறைத்தாலும் குடம் நிறையுமா? குடம் நிறைய வேண்டுமானால், தோண்டியை மாற்றவேண்டும் அல்லது அதை அடைக்க வேண்டும். இதைத்தான் அறிவுள்ளோர் செய்வர். அதைத்தான் நாமும் கூறுகிறோம்.

நாம் ஏன் இவ்வளவுதாரம் கூற

கிறோமென்றால், டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கூறுகிறார்; தாழ்த்தப்பட்டோர் இந்நிலைக்கு வந்ததற்கும், இவ்வளவு இழிவான நிலையிலிருப்பதற்கும் ஹிந்துமதம் தான்காரணம் என்றும், ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வதற்கு ஹிந்து மதத்தைச் சேர்ந்தவை என்று சொல்லப்படும், ஆரிய வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவைகளை நம்புவதும் ஆதரிப்பதுமேயாகும் என்றும், இவைகளை நம்பாமலும், ஆதரிக்காமலும் இருந்தால் ஹிந்துக்கள் என்று அழைக்க மாட்டார்களன்றோ? அப்பொழுது, ஜாதிப் பிரிவுகளும், சமயப் பிரிவுகளும், வருணப் பிரிவுகளுமில்லாதொழியுமன்றோ! இவைகள் ஒழிந்தால், சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளில் முன்னேற முடியுமன்றோ? எனவே தான், தாழ்த்தப்பட்டோர் ஹிந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளக்கூடாதென்றும், இவ்வளவு வேற்றுமைகளை இந்நாட்டிலே யுண்டுபண்ணி, இந்நாட்டு மக்களைக் குட்டிச்சுவராக்கிய வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் அழிக்கப்படவேண்டும் என்றும் சொல்லி வருகிறார்.

ஆனால்; தென்னாட்டில், நாங்களும் தாழ்த்தப்பட்டோர் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஒருசில தோழர்கள் முனிசாமி பிள்ளை, சிவசண்முகம் போன்றவர்கள்:

"டாக்டர் அம்பேத்கார் ஹிந்து மதத்தைப் பற்றி சமீபத்தில் சென்னையில் செய்த பிரசங்கங்களை 'ஹரிஜனங்கள்' (தாழ்த்தப்பட்டோர்) கவனிக்கக் கூடாது. ஹிந்து மதத்தில் குறிக்கப்பட்டிருக்கும் தர்மங்களை அனுசரித்து நடக்க வேண்டும்"

என்றும்

"அம்பேத்கார் ஹிந்து மதத்தைப் பற்றிச் சொல்லியிருப்பதை நாம் கவனிக்கவேண்டியதில்லை"

என்றும் கூறிவருகிறார்கள். இவர்கள் தங்கள் சமூகம் இன்று இருக்கும் நிலையையும் முன்னிருந்த நிலைமையையும் அதன் வரலாறுகளையும் உணர்ந்து சொல்லும் வார்த்தைகளா இவை என்பதை பொதுமக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இவர்கள் சமூகத்தில் ஒருசிலர் ராவ்பகதூர் திவான்பகதூர் பட்டங்களும், மந்திரிப்பதவிகளும் பெற்றுவிட்டால் போதுமா? ஒருசிலர் பொருளாதாரத்தில் உயர்ந்துவிட்டால் போதுமா? பொதுவாக அச்சமூகம் என்னநிலையிலிருக்கிறது? அவர்களுடைய பொருளாதார நிலையென்ன? இவைகளை மாற்றியமைக்க இன்றைய சமூக அமைப்பு முறைகளும் திட்டங்களுமிருந்து வந்தால் முடியுமா என்பதை எண்ணிப்பார்த்து இவர்கள் பேசியிருப்பார்கள் என்று எந்தக் கபோதியும் கருதமாட்டான். தங்களுக்கு ஒருசிலருடைய வாழ்த்தும் புகழும் அப்போதைக்குக் கிடைத்தால் போதும், கைதட்டலும் பூமாலை அணிவிப்பும் இருந்தால் போதும் என்று எண்ணி இவ்வாறு இவர்கள் பேசிவருவார்களேயானால், இவர்களைக் குறித்து எதிர்கால சரித்திரக்காரர் கண்டிக்காமலோ, எதிர்கால மக்கள் சிரிக்காமலோ, இருக்கமாட்டார்கள்.

ஆகவே; தங்களுக்கு இன்று கிடைக்கும் அற்பப் புகழையும் வாழ்த்துதலையும் பெரிதென மதிக்காமல், தங்களுடைய நலனை மட்டிலும் பெரிதெனக் கருதாமல், மக்களுடைய நலனையே பெரிதெனக் கருதி, அவர்களுக்காக என்னசெய்ய வேண்டும், எத்தகைய தியாகம் செய்யவேண்டும் எவரெவர்களுடன் எதிர்க்கவேண்டும் என்று சிந்தித்துப் பார்த்து, அதற்கானவைகளைச் செய்ய முன்வரவில்லையென்றால், சமூகநலனில் அக்கறையுள்ளவர்கள், இத்தகையவர்களைச் சிறிது காலத்திற்காவது ஒதுக்கி வைக்கத்தான் வேண்டும். அப்பொழுதுதான் அந்த சமூகமும், இனமும் முன்னேற முடியும்.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஏன் ஹிந்து மதத்தைக் குறை கூறுகிறார்? ஏன் ஹிந்துக்களைப் புல்லுருவிகள் என்று சொல்லி வருகிறார் என்பதை இவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்நாட்டின் வரலாற்றையும், இதிகாசங்களையும் புராணங்களையும் மனுநீதி முதலிய சாத்திரங்களையும் அல்லது ஆரியர்களால் எழுதப்பட்ட எந்த நூலையும் எடுத்துப் பார்த்தால், ஆரியர்கள்—ஹிந்துக்கள்—உழைக்காமல் பிறர் உழைப்பை உறிஞ்சி வாழ்ந்து வந்ததையும், வாழ்ந்து வருவதையும்தான் காணமுடியும். எந்த நூலை எடுத்தாலும், ஆரியர்கள் சுகமாக வாழ்வதற்கும் மற்றவர்கள் அவர்களுக்கு ஏவல் புரிவதற்கு ஏற்றமுறையிலும்தான் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். இவைகளைப் பார்க்கும் எவர் மனம் தான் எரியாமலிருக்கும்? வயிறெரிந்து சொல்லும் வார்த்தைகளைக் கண்டு விழிப்படைவதை விட்டு அதை மூடிமூடிவைத்தல் நலமா என்பதை எண்ணிப்பார்த்து விழிப்படைவார்களாக.

# பெரியார் ஈ.வெ.ரா.வட இந்திய சுற்றுப்பிரயாணம்

## வெற்றிமேல் வெற்றி

பெரியார் ஈ. வெ. ராமசாமி தோழர்கள் மணியம்மை, ஆனைமலை நரசிம்மன் ஆகியவர்கள் கல்கத்தா, கான்பூர் ஆகிய இடங்களில் முறையே நடந்த ராய் பார்டி மாநாட்டிற்கும், பிற்படுத்தப்பட்ட (பார்ப்பனரல்லாதார்) மாநாட்டுக்கும் மற்றும் சிலவைகளுக்கும் 21-12-44ல் புறப்பட்டுச் சென்று இன்று (6-1-45) காலை ஈரோடு வந்து சேர்ந்தார்கள்.

கல்கத்தா மாநாட்டில் வாலிபர்களுக்கு அறிவுரையாக சிறிதுநேரம் பெரியார் தமிழில் பேசினார். அதை தோழர் எஸ். முத்தையா முதலியார் சி. ஐ. இ. அவர்கள் ஆங்கிலத்தில மொழிபெயர்த்துக் கூறினார்.

பின் கான்பூர் அகில இந்திய பிற்பட்ட (பார்ப்பனரல்லாதார்) வகுப்பு லீக் மாநாட்டில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஆங்கிலத்தில் ஒருமணி நேரம் பேசினார். அதை லீக் காரியதரிசி கவுரிசங்கர்பால் எம். ஏ., பி. எல்., அவர்கள் இந்தியில் மொழி பெயர்த்துக்கூறினார்.

மாநாட்டின் இரண்டாவது, மூன்றாவது நாள் நடவடிக்கைகளிலும் 2-வது நாள் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்திலும் பெரியார் தலைமை

ரோஜா முத்தையா

வகித்து திராவிட கழக இயக்கத் தீர்மானம் பலவற்றை அதில் நிறைவேற்றச் செய்தார். முடிவுரையாக அரைமணி நேரம் ஆங்கிலத்தில் பேசினார்.

நடவடிக்கைகளும் சொற்பொழிவுகளும் அடுத்த வாரம் வெளிவரும்.

அங்கு நடந்த தீர்மானங்களில் முக்கியமானது "எல்லா இந்திய பிற்பட்ட இந்துக்கள் லீக்" என்று இருந்துவந்த பெயரை மாற்றி "பிற்பட்ட வகுப்புப் பெடரேஷன் ஆப் இந்தியா" என்று மாற்றப்பட்டது முக்கியமானதாகும். இந்தியா முழுவதிலுமுள்ள பிற்பட்ட வகுப்பார் (பார்ப்பனரல்லாதார்) தாங்கள் இந்துக்கள் (ஆரியர்கள்) அல்ல என்பதை ஒப்புக்கொள்ளும்படி பெரியார் செய்து விட்டார்.

மனுஸ்மிருதி, இராமாயணம், கீதை ஆகியவைகள் எரிக்கப்பட வேண்டும் என்கின்ற ஒலி கான்பூரையே கலக்கிவிட்டது.

இராவணனுக்கு ஜே சம்பூகனுக்கு ஜே என்று காவி உடை தரித்த சாமியார்கள் வானம் முட்டக் கூவினார்கள்.

டை பெடரேஷனுக்குத் தலைவராகப் பெரியார் தெரிந்தெடுக்கப்பட்டதோடு 60 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியில் இருந்து ஒரு காரியக் கமிட்டி தெரிந்தெடுக்கப்படவும் அதில் பெரியார் தன் இஷ்டப்படி 5 பேர்களை நியமித்துக் கொள்ளவும், தங்கள் பெடரேஷனை திராவிட பெடரேஷனோடு இணைத்துக் கொள்ளவும் தீர்மானம் செய்யப்பட்டது. அங்கு வந்த பல மாகாண பிரதிநிதிகளும் (இந்தியா முழுவதுக்கும் திராவிடர் பெடரேஷன் ஏற்படுத்த ஒப்புக்கொண்டார்கள்)

மாநாட்டிற்குத் தலைமைவகித்த டாக்டர் M. N. சர்க்கார் M. A., Ph. D., அவர்களுக்கு இவை பிடிக்காததால் அவர், பகுதியில் எழுந்து போய்விட்டார். பிறகு நாளும் பெரியாரே தலைமை வகித்து நடத்தினார்.

பொதுவாகச் சொன்னால் திராவிடநாட்டில் உள்ள புது எழுச்சி [illegible]

## அறிவிப்பு

திராவிடர் கழகங்களின் பெயர்களையும் அதன் நிர்வாக உறுப்பினர் பெயர்களையும் சேர்த்து, ஆங்கிலத்திலும், தமிழிலும் புத்தகம் வெளியிட எண்ணியிருப்பதாலும், அவ்வேலை இம்மாதத்திலே துவக்கப்படயிருப்பதாலும் ஆங்காங்குள்ள தோழர்கள் திராவிடர் கழகங்களின் பெயர்களையும் நிர்வாக உறுப்பினர்களின் பெயர்களையும் எழுதியனுப்பக் கோருகிறோம். இதுவரை சில ஊர்களிலிருந்து தான் வந்திருக்கின்றன.

திராவிடர் கழகம்,
தலைமை நிலையம்.

## பகுத்தறிவாளர் முதலாவது மாநாடு

திருநெல்வேலி ஜில்லா பகுத்தறிவாளர் முதலாவது மாநாடு கீழநாவில் நாளது தை மாதம் 15-ஆம் தேதி 28-1-45-ல் வ. பு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். இன்னும் பல தலைவர்களும் மாநாட்டில் கலந்து கொள்ளுவார்கள்.

வேல். வெள்ளசாமி,
செயலாளர்.

## திருச்சி ஜில்லா தெ. இ. ந. உ. சங்கப் பொதுக்கூட்டம்

7-1-45 ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு திருச்சி, தஞ்சை திராவிட கழக அமைப்பாளர் கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களின் தலைமையின்கீழ், திருச்சி கருணாநிதி பார்க்கில் கூடும். அதுபோது கீழ்க்கண்ட விஷயங்களை ஆலோசனைசெய்து முடிவு செய்ய இருப்பதால் இயக்கத்தோழர்கள் தவறாமல் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சேலம் மாநாட்டுத் தீர்மானப்படி சங்கத்தின் பெயரை "திராவிடர் கழகம்" என்று மாற்றுதல்.

1945ம் ஆண்டிற்கு நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல்.

இதரவிஷயங்கள்.

என். சங்கரம்பிள்ளை, தலைவர்.
இ. பொ. வேதாசலம், அமைச்சர்.

மாகப் பரவ அதிக வசதி இருக்கிறது என்று சொல்லலாம்.
மீதம் அடுத்த வாரம்.

## மருத்துவ குல தொழிலாளர்களுக்கு வேண்டுகோள்

திண்டுக்கல் மருத்துவ குலத் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் கே. வி. பொன்னுசாமியும், காரியதரிசி தோழர் டி. எ. தங்கவேலும் மருத்துவ குலத் தோழர்களுக்கு விடுத்திருக்கும் வேண்டுகோளில்,

திருச்சியில் நடந்த சென்னை மாகாண மருத்துவகுல மாநாட்டில் நிறைவேறிய தீர்மானப்படி, "மேளம் வாசிப்பவர்கள் கண்டிப்பாய் உள்ளே வரக்கூடாது" என்ற விளம்பரத் தாளை டை சங்கத்தின் சார்பாக ஒவ்வொரு சலூன், கூடம் இவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், மேளம் வாசிப்பவர்கள் நம்மிடம் வந்து சமரசம் செய்து நம் சமூகத்தினருக்குத் தொழில் செய்யும் வரை நாம் ஒற்றுமையுடன் கட்டுப்பாடாக இருந்து வெற்றியடைவது ஒவ்வொரு மருத்துவகுலத் தொழிலாளருடைய கடமையாகும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

## தாராசுரம் திராவிடர் கழகம்

### முதலாவது ஆண்டுவிழா

டை விழா 16-1-45-ம் தேதி செவ்வாய்க்கிழமை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் கொடியேற்றுவார்.

தோழர் கோ. சி. பெரியசாமிப் புலவர் திராவிடநாட்டுப் படத்தை திறந்து வைப்பார்.

தோழர் ஆர். எஸ். பி. ராமையா பெரியார் படத்தைத் திறந்து வைப்பார்.

தோழர்கள் பி. ஜனார்த்தனம், சி. என். அண்ணாதுரை, கே. கே. நீலமேகம், வி. சின்னத்தம்பி, வி. ஆர். பொன்னுசாமி, சி. நாகராஜன் பி. ஏ., பி. எல்., முதலியவர்கள் கலந்துகொள்வார்கள்.

ஆண்டுவிழாவன்று இரவு நடைபெறும் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்னும் நாடகத்திற்குத் தலைமை வகிக்க கலைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

குடந்தை ஸ்டேஷன் ரேடியோ ஒலி பெருக்கி அமைக்கப்படும்.

திராவிடர் கழகம்;
தாராசுரம்.

# மாவட்டந்தோறும் மாணவத்தோழர்கள்

## தென்னார்க்காடு (முதல் பகுதி)

26-12-44 மாலை 6 மணிக்கு திட்டக்குடி வானொலி மைதானத்தில் தோழர் சி. ராமசாமி தலைமையில் திராவிடர் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் டி. சி. எஸ். மணியம், ப. வெற்பரசன், ப. நட்பரசன், டி. வ. சலீம், க. சக்ரபாணி முதலியோர் இரவு 10-30 வரை விளக்கமாகப் பேசினார்கள்.

27-12-44 காலை 7 மணிக்கு நக்கரிகன்னூர் இளந்தமிழர் இயக்கத்தின் சார்பில் நடந்த கூட்டத்தில் தோழர் கோ. குழந்தைவேலன் தலைமையில் தோழர்கள் டி. சி. எஸ். மணியன், வெற்பரசன், நட்பரசன், ஆகியோர் பேசினர்.

27-12-44 மாலை 6 மணிக்கு விருத்தாசலம் ரேடியோ நிலையத்தில் நடந்த திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் து. பழனிக்கண்ணு தலைமையில் தோழர்கள் டி. சி. எஸ். மணி, நட்பரசன், வெற்பரசன், இஸ்மாயில் முதலியோர் விரிவுரையாற்றினர். தோழர் கலாமணி இயக்கப் பாடல்கள் பாடினார். வ. சி. பொன்னரசன் நன்றி கூறினார் தோழர் சி. முனுசாமி யாவரையும் உபசரித்தார்.

29-12-44 சின்ன சேலம் திராவிடர் கழகச் செயலாளர் தோழர் கலாமணி தலைமையில் தோழர் டி. சி. எஸ். மணி வெற்பரசன், நட்பரசன் ஆகியோர் திரௌபதி கோயிலுக்கு முன்புறம் நடந்த பொதுக்கூட்டத்தில் பேச்சாற்றினர்.

30-12-44 காலை 7-30 மணிக்கு பெத்தானூர் திராவிடர் கழகத் தலைவர் தோழர் சண்முகனார் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் டி. சி. எஸ். மணி, வெற்பரசன், நட்பரசன், கலாமணி முதலியோர் சொற்பொழிவாற்றியபின் தோழர் தென்னரசன் நன்றி கூறினர்.

அன்று பகல் 11-30 மணிக்கு இராயர் பாளையத்தில் தோழர் வேணுகோபால் எம். ஏ. ஆதரவில் தோழர் கலாமணி தலைமையுடன் டி. சி. எஸ். மணி, வெற்பரசன், நட்பரசன், தென்னரசன் ஆகிய தோழர்கள் பேசினார்கள். தோழர் வேணுகோபாலன் நன்றி கூறினார்.

அன்று மாலை 3-30 மணிக்கு வாதப்பனூர் தோழர் திருமலை கோனார் ஆதரவில் டி. சி. எஸ். மணியன் தலைமையில் வெற்பரசன், நட்பரசன், கலாமணி ஆகியோர் பேசியதும் எஸ். இப்ராஹிம் நன்றி தெரிவித்தார்.

அன்று இரவு 8-மணிக்கு உலகியநல்லூர் திராவிடர் கழகத்தலைவர் தோழர் எ. இராசகோபால் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் வெற்பரசன், நட்பரசன், கலியன், கலாமணி ஆகிய தோழர்கள் விரிவுரையாற்றவும், தோழர் எஸ். தையான் நன்றி கூறினார். இரவு 1 மணிக்கு கூட்டம் முடிந்தது.

ரோஜா முத்தையா

31-12-44 காலை 11½ மணிக்கு தொட்டப்பாடியில் தோழர் இப்ராகிம் தலைமையில், தோழர்கள் மணியன், வெற்பரசன், நட்பரசன், தென்னரசன், கலாமணி பாபு; ஆகியோர் பேச்சாற்றினார்கள்.

வையூர் ஆதிதிராவிடர் தெருவில் தோழர் வடிவேலு தலைமையில் நடந்த கூட்டத்திலும் மேற்படி மாணவத் தோழர்கள் கலந்து பேசினார்கள். அன்று மாலை மரக்காணத்தில் தோழர் இப்ராகிம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்திலும் பேசினார்கள், தோழர் எழுட்டன் நன்றி கூறினார்.

31-12-44 இரவு 9-30 மணிக்கு தென்செட்டியக்கல் தோழர் இரா. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் டி. சி. எஸ். மணியம், வெற்பரசன், நட்பரசன், தென்னரசன், எழுட்டன், கலாமணி ஆகியோர் பேசிய பின் தோழர் இப்ராகிம் நன்றி கூற கூட்டம் இரவு 12 மணிக்கு முடிவுற்றது.

இத்திராவிட மாணவர் பிரசாரக் குழுவில் கலந்து பிரயாணம் செய்த மாணவத் தோழர்களுக்கும் சென்ற இடங்களில் கூட்டம் நடத்தியும் உடன் சென்றும், உணவளித்தும் உபசரித்து உதவிய எல்லா தோழர்களுக்கும் எம் கழகத்தின் வாயிலாக நன்றி செலுத்தப் படுகிறது. (தொடரும்)

செயலாளர், திராவிட மாணவர்,
பிரசாரக் கழகம், ஈரோடு.

# பட்டம் பதவிவிடத் தயார்

## சர் பி. டி. ராஜன்

21-12-44-ல் தேவ கரூர் உயர்நிலைப் பள்ளியில் தேசிய போர்முன்னணி தலைவர் சர் பி. டி. ராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற யுத்த முன்னணி கூட்டத்தில், தோழர் சி. பி. சின்னராசு ஐந்தாண்டும் போரும் என்பது பற்றிப் பேசினார். தலைவர் முடிவுரையில் சர் பி. டி. ராஜன் பேசுகையில், தமிழ்நாடு தமிழர் நாகரிகம், தமிழ்ச் சங்கங்கள் இவைகள் தனித்து சிறந்து வாழவேண்டும் என்றும் தமிழர்கள் தமிழ்நாட்டிற்காக தியாகம் செய்யவேண்டும் என்றும், அதற்காகப் பட்டம் பதவிகளை இழக்கத் தயாரென்றும், தமிழ்நாடு தனியே பிரிந்திருப்பதைப் பார்த்து விட்டு இறப்பதாகவும் கூறினார்.

* *

(கூட்டத்தினர் உணர்ச்சியைக் கண்டு கூட்டத்தை சமாளிப்பதற்காக இவ்வாறு சொன்னார் போலும்!)

# திராவிட எழுத்தாளர் மாநாடு

## கோவையில் கூட்ட ஏற்பாடு

பெரும்பாலும் இன்றைய எழுத்தாளர்கள் "மறு மலர்ச்சி" என்று சொல்லிக் கொண்டு வெட்டிக் கட்டுரைகள் வரைகின்றனர் அரவிந்த மகரிஷியின் பெருமையைப் பற்றி வரைய தங்கள் அறிவினைச் செலுத்துகின்றனர். ரமண மகரிஷியின் புகழை இராப் பகலாக எழுதுகின்றனர். ராமகிருஷ்ணரின் தத்துவத்தை உபதேசிக்க தங்கள் மூளைக்கு வேலை கொடுக்கின்றனர். இவர்கள் தான் மறு மலர்ச்சி எழுத்தாளர்களாம்! அந்தோ! என்ன அறிவீனம்!

திராவிட எழுத்தாளர்களே எழுங்கள்! உங்கள் பேனாவால் மௌட்டீகத்தை ஒழியுங்கள்; புதுமைக்கு நல்வரவு கொடுங்கள். திராவிட எழுத்தாளர்கள் அனைவரும் ஒன்று சேருங்கள். நல்ல தீர்மானங்கள் நிறைவேற்றி நடைமுறையில் காட்டுங்கள். புதுமைப் புத்தகங்கள் வெளியிட கட்டுப்பாடான கழகங்களை நிறுவுங்கள்.

இந்த மாநாட்டிற்குத் திராவிட மக்களின் நன்மதிப்பைப் பெற்ற தோழர் ஜெ. எஸ். கண்ணப்பர் அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராய் இருக்க சம்மதம் கொடுத்துள்ளார்.

ஆங்காங்குள்ள திராவிட எழுத்தாளர்கள், தங்கள் முகவரியும், மாநாடு சம்பந்தமான ஆலோசனைகளையும் செயலாளருக்கு அனுப்பவும். மாநாடு நடத்தும் தேதியை பின்னர் அறிவிக்கப்படும்.

பண்டிட் ஜெய்காணி,
செயலாளர்,
திராவிட எழுத்தாளர் மாநாடு,
முகாம்: மேட்டுப்பாளையம்.

# தஞ்சைத் திராவிட வாலிபர் கழகம்

அன்புடையீர்!

யான் திராவிட மாணவர் மாநாடுகளின் சிறப்பு விழாவில் ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்து சொற்பொழிவு மலர் எனப் பெயரிட்டு ஒரு நூலாக வெளியிடவேண்டுமென அறிஞர் பலர் என்னை வேண்டிக்கொண்டனர் அவர்கள் வேண்டுகோளை நிறைவேற்றுதற்கும் இந்நூல் சிறப்புற வெளிவருவதற்கும் இத்துண்டுத்தாளைக் கண்ணுறும் அன்பர்கள், தத்தம்மாலியன்ற பொருளுதவி புரியவேண்டுமென வேண்டுகிறேன். பொருளனுப்ப விரும்பும் அன்பர்கள் "சோ. சி. பெரியசாமிப் புலவர் தஞ்சைத் திராவிட வாலிபர் கழகத் தலைவர் கருந்திட்டைக்குடி P. O. தஞ்சாவூர்" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறேன்.

சோ. சி. பெரியசாமிப் புலவர்.

## சி. டி. நாயகம் மறைவு

### நாடெங்கும் அனுதாபம்

நமது இயக்கத் தலைவர்களில் ஒருவரும், உள்ளன்போடு பெரியாரைப் பின்பற்றி நடப்பவர்களில் ஒருவருமான பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காகவே, அதிலும் குறிப்பாக அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகவே அல்லும் பகலும் உழைத்து வந்தவருமான தோழர் சி. டி. நாயகம் அவர்களின் மறைவு குறித்து நாடெங்கும் உள்ள திராவிட கழகங்களும் இதர சங்கங்களும் தனிப்பட்டவர்களும் அன்னார் குடும்பத்தினருக்கும் பத்திரிகைகளுக்கும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருக்கின்றனர். அவற்றின் கருத்தைக் கீழே தருகிறோம்:

நாடெங்கும் மக்களுக்கு அறிவை ஊட்டுவான் வேண்டி அறச்சாலைகளைத் தோற்றுவித்து அதன் நிர்வாகஸ்தராக இருந்து வந்த தோழர் சி. டி. நாயகம் அவர்கள் மறைந்த செய்தியைக் கேட்டு வருந்துவதாகவும், அன்னார் குடும்பத்தாருக்கு தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் ஆத்தக்குடி சர் ஏ. டி. பன்னீர்செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள்.

* *

17-12-44-ம் தேதி தோழர் பெரியசாமி தலைமையில் நடந்த ஆத்தக்குடி மேலச்சண்முகபுரம் திராவிடர் கழகக் கூட்டத்தில், காலஞ்சென்ற தோழர் நாயகம் அவர்களைக் குறித்து பல தோழர்கள் பேசிய பின் ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது.

* *

தமிழரின் விசுவாசியும் அன்பருமான தோழர் சி. டி. நாயகம் அவர்கள் மறைந்தார் எனக் கேட்டதும் திகில் அடைந்தேன். பிராமணரல்லாத வகுப்பார்கள் நலன்களுக்கு தமது அயராத உழைப்பால் ஆர்வம் ஊட்டுவதில் நம் நாயகம் நாயகமாகவே விளங்கினார்.........அவரது பிரிவு, பொதுநல உண்மையாளர்கட்கு துக்கப்படாமல் இருக்க முடியாது. ........." என ஆத்தக்குடி தோழர் டி. ஆர். சபாபதி எழுதுகிறார்.

* *

17-12-44-ஆம் தேதி தோழர் வே. துலுக்காணம் தலைமையில் நடைபெற்ற சென்னை வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகக் கூட்டத்தில், தோழர் நாயகம் அவர்களின் மறைவைக் குறித்து ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

20-12-44ம் தேதி ஆவணக்களரி தலைவர் தோழர் பூவாராகன் பி. ஏ., அவர்கள் தலைமையில் நடந்த சின்ன சேலம் திராவிடர் கழகக்கூட்டத்தில் காலஞ்சென்ற நமது சி. டி. நாயகம் அவர்களின் மரணத்திற்கும் அவரைப் பிரிந்து வருந்தும் அன்னார் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. தோழர் நாயகம் அவர்களின் அருந்தொண்டைப்பற்றி பல தோழர்கள் பேசினார்கள்.

* *

19-12-44ம் தேதி விருத்தாசலம் திராவிடர் கழகத்தில் தோழர் செ. தெ. நாயகம் பிரிவு பற்றியும், சேலம் எம். ஆர். சித்தையன் தந்தையார், காஞ்சி திராவிட நடிகர் கழகம் என். நாராயணசாமி ஆகியவர்களின் மரணத்தைக் குறித்தும் ஆழ்ந்த அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

18-12-44-ஆம் தேதி தோழர் வி. டி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பண்ருட்டி திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், தோழர் சி. டி. நாயகம் அவர்கள் இயற்கை எய்தியதைப் பற்றி அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

20-12-44-ஆம் தேதி தோழர் பி. எம். பாபு அவர்கள் தலைமையில் நடந்த சென்னை கல்விச் சங்கத்தின் நிர்வாகக் கூட்டத்தில், தோழர் சி. டி. நாயகம் அவர்கள் பிரிவைக் குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

19-12-44-ஆம் தேதி கும்பகோணம் டி. எம். நாயர் மெமோரியல் ஹாலில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், தோழர் சி. டி. நாயகம் அவர்கள் இயற்கை எய்தியதைப் பற்றி வருந்தியதுடன் அன்னார் குடும்பத்திற்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

22-12-44-ம் தேதி சிறுகனூர் திராவிடர் கழகம் என மாற்றியமைக்கப்பட்ட தெ. இ. ந. உ. சங்கக் கூட்டத்தில், தோழர் சி. டி. நாயகம் அவர்களின் மறைவைக் குறித்து அனுதாபம் தெரிவிப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

17-12-44-ம் தேதி கூடிய சென்னை [illegible] இளைஞர் கழகக் கூட்டத்தில் தோழர் செ. தெ. நாயகம் இயற்கை நிலை எய்தினது குறித்து வருந்துவதாகவும் தனது அனுதாபத்தை அவர் குடும்பத்தாருக்கு அறிவிக்கின்றது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## திருமணங்கள்

4-12-44ம் தேதி திங்கட்கிழமையன்று கடலூர் வள்ளலாருக்கும் பாகூர் தனலட்சுமி அம்மையாருக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ் ஆசிரியர்கள் ஔவை துரைசாமி, வெள்ளைவாரணார் திருமணத்தை நடத்தி வைத்தார்கள்.

அன்று மாலை 6-மணிக்கு திருமணத்தையொட்டி திராவிடர் கழகத்தின் சார்பில் கடலூர் வழக்கறிஞர் கே. வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கேசவன், மா. பீட்டர், இளவழகன், வீரமணி, தில்லை அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். ஆ. திராவிடமணி நன்றி கூறினார்.

* *

குடந்தை தாராசுரம் 11-12-44ம்தேதியில் பாவலர் பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் தோழர் ப. மாணிக்கத்திற்கும் தோழர் பட்டம்மாளுக்கும் சீர்திருத்த முறையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அவ்வமயம் தலைவர் அவர்களும், பல தோழர்களும் சுயமரியாதைத்திருமணமும் அதன் அவசியமும் என்பதுபற்றிப் பேசினார்கள்.

* *

திருநெல்வேலி தோழர் மந்திரமூர்த்தி உயர்தரப்பள்ளி உதவி ஆசிரியர் தோழர் எஸ். கந்தப்பன் அவர்கள் மகள் தோழர் ஆவுடையம்மாளுக்கும் தோழர் கே. சுப்பையாவுக்கும் 4-12-44-ல் மணமகன் இல்லத்தில் தமிழ்த் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. "குடி அரசு", "திராவிடநாடு" இவைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஒன்றும், திராவிடர் கழகம் தலைமை ஆபீசுக்கு(ஈரோடு)ம், திருநெல்வேலி ஜில்லா திராவிட ஆசிரியர் கழகத்திற்கும், திருநெல்வேலி ஜில்லா திராவிடர் கழகத்திற்கும் ரூபாய் ஒன்று வீதமும் நன்கொடை அளிக்கப்பெற்றது.

---

இராஜபாளையத்தில் 6-12-44ம் தேதி பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில், தோழர்கள் பாலராஜு—சிவபாக்கியம் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டதின் நினைவாக 'குடி அரசு'க்கு ரூ 2 நன்கொடையளிக்கப்பட்டது.

### மறைவு

திருவளர்சோலை தோழர் கோ. நாகமுத்து அவர்களின் தாயார் சுந்தரம்மாளின் இறுதிச் சடங்கு யாதொரு மூடச் சடங்குகளுமில்லாது நடந்தேறியது. இதன் நினைவாக 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

## பொன்மலை திராவிடர் கழகம்

### ஓர் வேண்டுகோள்

தோழர்களே,

2500 மைல் விஸ்தீரணமுள்ள தென் இந்திய ரெயில்வேயில் 40000 தொழிலாளர்களுக்கு தலைநகரமாயிருப்பது பொன்மலை, இங்கு 6000 தொழிலாளிகள் வரை வேலை செய்கிறார்கள்

ஒரு காலத்தில் தன்மதிப்பியக்கத்திற்கு உயிர்நிலையாயிருந்த ரெயில்வே தொழிலாளிகள் இன்று ஆரியத்திற்கு அடிமைப்பட்டு காங்கரஸ்; போலி கம்யூனிஸ்டுகளின் மாயவலையில் சிக்குண்டு தன்மானமிழந்து எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கிறார்கள் என்றால் மிகையாகாது.

இந்நிலைமையைப் போக்கி திராவிடர்களின் தன்மானத்தைக் காக்க இவ்வூர் திராவிட வாலிபர் கழகத்தார் சுமார் ஐந்து ஆண்டுகளாகப் பல கஷ்டங்களுக்கிடையே வேலை செய்து வருகிறார்கள்.

இங்குள்ள ஓர் பெரும் குறை நமதியக்கப் பொதுக்கூட்டங்கள் நடத்த வசதியான இடமும்; கழகத்தை நடத்த போதுமான கட்டிட வசதியும் இல்லாமையே. இதைக் கருதியே இவ்வாண்டு இவ்வேலையைப் பூர்த்தி செய்வதென்று முடிவு செய்து ரூபாய் 1500-க்கு ஓர் நிலம் வாங்கிவிட்டோம்.

தோழர்களே!

எங்களிடம் பணம் படைத்த பெரிய மனிதர்கள் உதவி ஏதும் இல்லை. எங்களைக் குறைந்த வருவாயுள்ள ஏழைத் தொழிலாளிகள். மனக்கரும் உணர்ச்சியும் கொண்டே இவ்வேலையை நாங்கள் ஆரம்பித்துவிட்டோம்.

மேலும் இதற்கு வெளியூர் தோழர்களின் உதவி கிடைக்குமென்ற முழு நம்பிக்கையின் மீதே இவ்வேலையைத் துணிச்சலாக ஆரம்பித்துவிட்டோம்.

எங்கள் முயற்சிக்கு ஆதரவு தந்த பெரியார் அவர்கள் ரூபாய் 150 நன்கொடை தந்ததுடன்; 23-12-44 'குடி அரசு' பத்திரிக்கையிலும், வெளியூர் தோழர்கள் பணம் உதவி செய்ய அறிக்கையும் (தலையங்கம்) வெளியிட்டுள்ளார்கள்.

ஆகவே நமது இயக்க வெளியூர் அன்பர்கள் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி எங்களுக்குத் தாராளப் பொருளுதவி செய்து மேற்படி கட்டிட வேலைக்கு உதவி புரிய வேணுமாய்ப் பெரிதும் கேட்டுக்கொள்கிறோம்.

பணம் அனுப்பும் வெளியூர் அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கும் பணம் அனுப்பவேணுமாய் பெரிதும் கேட்டுக்கொள்கிறோம்.

டி. மாணிக்கம் பொக்கிஷதார், கட்டிட கமிட்டி, திராவிட வாலிபர் கழகம், பொன்மலை,

செயலாளர், தி. வா. கழகம், பொன்மலை,

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## திராவிட நாட்டுச் செய்திகள்

நாமகிரிப்பேட்டை கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் இவ்வூர் சப்ரிஜிஸ்திரார் ஜனாப் எம். ஏ. சுபான் சாயபு பி. ஏ., அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தொழிலாளரும் ஒற்றுமையும் என்பதுபற்றி தோழர்கள் முத்துகிருஷ்ணன், அரங்கசாமி முதலியார்கள் பேசினார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கவேண்டியதின் அவசியமும் விளக்கப்பட்டது. தோழர் பி. சுப்பிரமணியம் நூல் கிடைப்பதிலிருக்கும் கஷ்டத்தை விளக்கினார்.

* *

சின்ன சேலத்தைச் சேர்ந்த செட்டியந்தல் கிராமத்தில் 10-12-44ந் தேதி தோழர் பூ. கணேசன் பி. ஏ, தலைமையில் நடந்த கூட்டத்தில், காந்தை புலவர் கல்லூரி தோழர் ஆர். இராமச்சந்திரனால் தொடங்கப்பட்ட "இளங்கோ இன்றமிழ்க் கழக"த்தை திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றியமைக்கப்பட்டது, தோழர் ஆர். இராமச்சந்திரன் என்னும் எழில் கிலவனால் கை கழகத்தின் திறப்பு விழா தொடங்கிவைக்கப்பட்டது. பல தோழர்கள் பேசினார்கள். தோழர் எழில் கிலவன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாகக் குழு தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

கோவை ஜில்லா உணவுப் பொருள் கௌன்சில் கூட்டம் 29-11-44-ஆம் தேதி ராவ்சாஹிப் ஆர். டி. பால் எம். ஏ., தலைமையில் நடந்தது. அதுசமயம், நெல், தானியங்கள் எவ்வளவு இருப்பு இருக்கிறது என்பது பற்றி விளக்கப்பட்டது. ஊரவைழக்கப்பட்டுள்ள ... கெட்டுப்போயிருப்பதால் சில்லறை வியாபாரிகள் அவைகளை விற்பதற்கு கஷ்டப்படுகிறார்கள் என்றும், அவை வாங்குபவர்களுக்கு அரிசியும் சேர்த்துக்கொடுக்கப்பட்டால் ஓரளவு கஷ்டம் குறையும் என்றும் கூறப்பட்டது. மேலும் கிராமாந்திரங்களின் உள்ளவர்களுக்கு, சாந்தி ஆபீஸர்களுக்கு வழங்கப்படுவதுபோல் காளைகளுக்கு ஒரு பவுண்டு அரிசி வழங்கப்பட்டால் அவர்களால் வேலை செய்யமுடியாதென்றும், அவர்களுக்குக் குறைந்தது 1½ பவுண்டாவது கொடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. தானியங்களை வாங்கும் அதிகாரிகள், கடுமையான முறைகளைக் கையாள்வதால், தானியங்களை உற்பத்தி செய்வோர், தானியங்களைப் பதுக்குவப்படுத்தி விற்பனைக்கு ஏற்ற முறையில் மைக்கானக் காலத்திலே போட்டு வைத்து விடுகிறார்கள் என்றும், இதனால், தானியங்கள் சேகரித்தில் கெட்டுப்போய் விடுகின்றன என்றும் எடுத்து விளக்கப்பட்டது. அதேபடியாக, தானியங்களின் விலையை ஏனைய பொருளின் விலையோடிக்கு ஏற்றவாறு நிர்ணயம் செய்யாவிட்டால், குடியானவர்கள் உணவுப்பொருள்களைப் பயிர் செய்வதற்குப் பதிலாக லாபந்தரும் பொருள்களை பயிர்செய்ய நேரிடும் என்றும் எடுத்துக் காட்டப்பட்டது. தலைவர் யாவற்றையும் பரிசீலனைசெய்து சர்க்காருக்குத் தெரிவிப்பதாகக் கூறினார். தானியங்கள் வாங்குதல் சம்பந்தமாக விடும் உத்தரவுகளை தமிழில் பிரசுரம் வெளியிடுமாறும் கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

* *

ஈரோடு முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் யூனியன் சங்கக்கூட்டம் 16-12-44ந் தேதி தோழர் என். கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. அது சமயம் 7-12-33ந்தேதி சர்க்கார் உத்தரவுப்படி ஆசிரியர்களுக்கு அதிகப்படியான சம்பளம் தரவேண்டுமாக முனிசிபல் கமிஷனரைக் கேட்டுக்கொள்வதாகவும் தலைமை ஆசிரியர்களுக்கு ரூ. 5-அலவன்ஸ் கொடுக்கும்படியும், எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குப்போய்பாசாகாமல் ஹையர்கிரேட் டிரயினிங் பாசாகி ஆசிரியர் வேலைபார்த்து வருபவர்களின் சர்டிபிகேட்டை யாதொரு நிபந்தனையுமில்லாது செக்கண்டரி கிரேட் சர்டிபிகேட்டாக மாற்றுவதற்கு அனுமதி தரவேண்டுமாக கேட்டுக்கொள்வதாகவும், சமீபத்தில் யுத்தத்திற்குப்பின் கல்வி திட்டம் என்ற பெயரால் வெளியான சார்ஜண்ட் திட்டத்தைக் கண்டித்தும், பள்ளிக்கூட நாட்கள் வருடத்திற்கு 220 என்றிருப்பதை 200 ஆகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## "குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

6 அணா புத்தகங்கள்

மனிதன் என்றால் என்ன?
கர்ப்ப ஆட்சி
மெய்ஞ்ஞானமுறையும்,
மூடநம்பிக்கையும் 1-ம் பாகம்
இராவணன் அல்லது இணையற்றவீரன்
கிடைக்குமிடம்:
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited, Printed, and Published by [illegible] at the Kudi Arasu Press, [illegible], Erode.